# அரசியல் மற்றும் ஊடகத் துறையில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக புதிய கூட்டணிகளுக்கு ஆதரவளித்தல்.

## நிகழ்ச்சித் திட்டத்தின் சுருக்கம்:

வன்முறைகள் அல்லது வன்முறை அச்சுறுத்தல்கள் என்பன உள்ளடக்கிய ஜனநாயகங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு மிகவும் கடுமையான தடைகளில் ஒன்று ஆகும். இது அரசியல் மற்றும் ஊடகத் துறைகளில் பங்கேற்பதற்கான ஒரு பெண்ணின் திறனை நேரடியாகப் பாதிக்கின்றது. அரசியல் மற்றும் ஊடகத் துறைகளில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் என்பது அவர்கள் பெண்கள் என்ற காரணத்திற்காக அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அனைத்து விதமான பௌதீக மற்றும் நிகழ்நிலை (ஒன்லைன்) வடிவிலான தீங்குகள், துன்புறத்தல்கள், வற்புறுத்தல்கள், மற்றும் மிரட்டல்களை உள்ளடக்குகின்றன. அரசியல் மற்றும் ஊடகத் துறைகளில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பெரும்பாலும் தனிப்பட்ட பெண்களை நோக்கியதாகவே காணப்படுகின்றன. ஆனால் அவை மேலும் பரவலாக ஏற்கனவே அரசியல் மற்றும் ஊடகத் துறைகளில் செயற்பட்டு வரும் மற்ற பெண்களைப் பயமுறுத்துவதாகவும், மற்றும் இந்த இரு துறைகளில் ஏதேனும் ஒன்றில் ஒரு தொழலைத் தொடரக் கருதும் பெண்களைத் தடுக்கும் நோக்கிலும் மற்றும் பொது வாழ்க்கையில் எந்தவொரு திறனிலும் பெண்கள் பங்கேற்கக் கூடாது என்று சமுதாயத்திற்கு எடுத்துக் காட்டுவதாகவும் உள்ளன. இது கோவிட்-19 நோய்ப்பரவலின் அதிர்ச்சியால் மேலும் மோசடைந்துள்ள ஒரு உலகளாவியப் பிரச்சனை ஆகும்.

இந்த சவால்களை எதிர்கொள்வதற்கு, சர்வதேச விவகாரங்களுக்கான தேசிய ஜனநாயக நிறுவனம் (NDI) மற்றும் சர்வதேச பெண்களுக்கான ஊடக நிறுவனம் (IWMF) ஆகியவை ஒன்றிணைந்து அரசியல் மற்றும் ஊடகம் ஆகிய இரு துறைகளிலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதற்காக அரசியலில் உள்ள பெண்கள் மற்றும் ஊடகத்துறையில் உள்ள பெண்கள் ஆகியோரை ஒன்றிணைக்கும் ஒரு நிகழ்வை நடாத்துகின்றன. இந்த நிகழ்வானது பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

1. 2020 தொடக்கம் 2022 வயையிலான இரு ஆண்டு காலப் பகுதிகளுக்கு நடைபெறக் கூடிய நிகழ்நிலை (ஒன்லைன்) பயிற்சிப் பட்டறைகளின் தொடர் (மொத்தம் 90 மணித்தியாலங்கள்). இந்த நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்யும் பங்குபற்றுனர்களுக்கு இறுதியில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
2. இந்த நிகழ்ச்சித்திட்டத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட பங்குபற்றுனர்களுக்கு பின்வருவனவற்றை அணுகலாம்
    a. பாதுகாப்புத் திட்டமிடல் கருவிகள், இரண்டு துறைகளிலும் அரசியல் ரீதியாக செயற்படக் கூடிய பெண்களுக்கான நிகழ்நிலை பாதுகாப்புக் கருவிகள்;
    b. ஊடகம் மற்றும் அரசியல் ரீதியாக செயற்படக் கூடிய பெண்களுக்கான விரோதமான சூழல்கள் பற்றிய மற்றும் முதலுதவிப் பயிற்சிகள்;
    c. அரசியல் கட்சிகள்,சட்டமன்ற உறுப்பினர்கள், ஊடக நிறுவனங்களை இலக்காகக் கொண்ட பரிந்துரைகளில் பெண்களுக்கு உதவக் கூடிய பல்வேறு வகையான கருவிகளின் வடிவமைப்பிற்கான அணுகல்கள் மற்றும் பயிற்சிகள்;
    d. அரசியல் மற்றும் ஊடகத் துறையில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பற்றி பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான பிரச்சாரங்களை வடிவமைப்பதற்கான பயிற்சிகள் மற்றும் அணுகல்கள்.

3. மேலதிகமாக, அரசியல் மற்றும் ஊடகத் துறையில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பற்றிக் கலந்துரையாடவும் மற்றும் பெண்களின் அரசியல் பங்கேற்பில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளின் எதிர்மறையான தாக்கத்தை வெளிப்படுத்துவதற்கான பரிந்துரை மூலோபாயங்கள் அல்லது பிரச்சாரங்களை உருவாக்குவதற்கும் பங்குபற்றுனர்களுக்கு ஒரு மாதத்திற்கு இரு முறை நடைபெறும் நிகழ்நிலைச் சந்திப்பின் போது சந்தர்ப்பம் கிடைக்கும்.

விண்ணப்பங்களுக்கான முடிவுத் திகதி செப்டம்பர் 20, 2020 ஆகும். அனைத்து விண்ணப்பங்களும் சமர்ப்பிக்கப்படக் கூடிய, IWMF இன் பாதுகாப்பான நிகழ்நிலை விண்ணப்பிக்கும் முறைமை மூலமாக ஏற்றுக்கொள்ளப்படும். பதிவிறக்கம் செய்யப்படக் கூடிய விண்ணப்பப் படிவத்தின் பதிப்பை இங்கு காணலாம் மற்றும் அவை gender@ndi.org என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாகவும் அனுப்பப்படலாம். மேலதிகத் தகவல்களுக்கு, எமது வலைத்தளத்தை பார்க்கவும்.

## தகைமை:

**இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்குத் தகைமையுடையவராக இருப்பதற்கு, நீங்கள்:**

- ஒரு பெண் என அடையாளங்காட்டல்.
- இலங்கைப் பிரஜையாக அல்லது நிரந்தர வசிப்பாளராக இருத்தல்.
- 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவராக இருத்தல்
- அரசியலில் ஈடுபடும் பெண்ணாக அல்லது ஊடகத்துறையிலுள்ள ஒரு பெண்ணாக இருத்தல் - கீழே உள்ள ஒவ்வொரு துறைகளுக்கும் உரிய விரிவான தகவல்களைப் பார்க்கவும்.

இந்த நிகழ்ச்சித்திட்டம் பெண்கள் என அடையாளம் காட்டும் திருநங்கைகள் மற்றும் இரு-பாலின வரையறைக்குள்ளும் உள்ளடங்காதவர்கள் உட்பட அனைத்துப் பெண்களையும் உள்ளடக்கியது.

## துறை ரீதியான தகைமைக்குரிய தகவல்கள்:

**கீழ் காணப்படும் இரு விருப்புத் தேர்வுகளிலிருந்து ஏதாவது ஓரு துறையைத் தேர்ந்தெடுக்க..**

1. ***அரசியலில் உள்ள பெண்கள்:*** உங்களை அரசியலில் ஈடுபாடுள்ள ஒரு பெண்ணாக நீங்கள் கருத வேண்டும் மற்றும் குறைந்தது கடந்த மூன்று ஆண்டு காலங்களிலிருந்து ஈடுபாடு காட்டுபவராக இருக்க வேண்டும். இந்தத் திட்டமானது கீழே உள்ள பின்வரும் பகுதிகளில் ஒன்றில் தொழில்வாண்மை ரீதியாக அல்லது தன்னார்வலராக ஈடுபாடுடைய ஏதாவது ஒரு பெண்ணை "அரசியல் ரீதியாக ஈடுபாடுடையவர்" என வரைவிலக்கணப்படுத்துகின்றது:
    - சிவில் சமூகம் - இது இலாப நோக்கமற்றவை, அரச சார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச நிறுவனங்கள், சமுதாய நிறுவனங்கள், மற்றும் கீழ் மட்ட மக்களுடன் பணிபுரியும் உள்ளூர் நிறுவனங்கள் போன்றவற்றின் ஏதாவது ஒரு உறுப்பினரை உள்ளடக்கும்.
    - தேசிய அரசியல் (பதவியில் உள்ள ஒருவர், ஒரு வேட்பாளர், அரசியல் கட்சி உறுப்பினர் அல்லது தேர்தல் அதிகாரி/பணியாளர் போன்றவராக)
    - மாகாண அரசியல் (பதவியில் உள்ள ஒருவர், ஒரு வேட்பாளர், அரசியல் கட்சி உறுப்பினர் அல்லது தேர்தல் அதிகாரி/பணியாளர் போன்றவராக)
    - மாநகர அரசியல் (பதவியில் உள்ள ஒருவர், ஒரு வேட்பாளர், அரசியல் கட்சி உறுப்பினர் அல்லது தேர்தல் அதிகாரி/பணியாளர் போன்றவராக)

**உங்களின் அரசியல் செயற்பாட்டை நீங்கள் எவ்வாறு விபரிப்பீர்கள்? பின்வருவனவற்றுள் எது உங்களின் பங்கை சிறப்பாக விபரிக்கின்றது?**

- தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரி (தேசிய, மாகாண, அல்லது மாநகர/உள்ளூராட்சி மட்டம்)
- தேர்தல் அலுவலகர் அல்லது பணியாளர்
- அரசியல் வேட்பாளர்
- அரசியல் செயற்பாட்டாளர் அல்லது அமைப்பாளர்
- சிவில் சமூக உறுப்பினர்

2. ***ஊடகத் துறையிலுள்ள பெண்கள்:*** நீங்கள் ஒரு நிறுவனம் சார்ந்த அல்லது சுயாதீனமான ஊடகவியளாராக மூன்று (3) அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்கள் செய்தி ஊடகங்களில் பணிபுரியும் தொழில்வாண்மை அனுபவம் உள்ள ஒருவராக இருக்க வேண்டும். பல்கலைக்கழக மாணவராக நீங்கள் நிறைவு செய்த பணி அனுபவப் பயிற்சிகள் மற்றும் ஊடகவியல் சார்ந்த வேலைகள் என்பன தொழில்வாண்மை அனுபவங்களாகக் கருதப்படமாட்டாது.

**நான் ஒரு (ஒன்றைத் தெரிவு செய்க)**

- காணொளிப்பதிவு ஊடகவியலாளர்
- புகைப்பட ஊடகவியலாளர்
- அச்சு ஊடகவியலாளர்
- பல்ஊடக ஊடகவியலாளர்
- ஒலி ஊடகவியலாளர்
- வானொலி ஊடகவியலாளர்
- வேறு (உதாரணம்: வலைப்பதிவாளர்)

**நீங்கள் ஒரு சுயாதீன ஊடகவியலாளரா அல்லது ஊடகம் ஒன்றில் பணிபுரியும் ஊடகவியலாளரா?**

- சுயாதீன ஊடகவியலாளர்
  - உங்களின் அதிகமான வேலைகள் பிரசுரிக்கப்படும் நிறுவனங்களைப் பட்டியலிடுக.
- ஊடகம் ஒன்றில் பணிபுரியும் ஊடகவியலாளர்
  - நீங்கள் பணிபுரியும் ஊடக நிறுவனங்களைப் பட்டியலிடுக.

*வழங்கப்படும் அனைத்துத் தகவல்களும் நம்பிக்கைக்குரியதாகவும் மற்றும் மிகவும் பொறுப்புடனும் வைத்திருக்கப்படும் மற்றும் அவை விண்ணப்பக் கடமைகளைப் பூர்த்தி செய்வதற்காகத் தேவைப்படும் நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படும், மேலும் அவை வேறு எந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்படமாட்டாது, அல்லது எந்தவொரு மூன்றாம் தரப்பினருக்கும் வெளிப்படுத்தப்பட மாட்டாது.*

**தனிப்பட்ட தகவல்கள்:**

- **முழுப்பெயர்:**
- **பிறந்த திகதி:** திகதி/மாதம்/வருடம்
- **தொலைபேசி இலக்கம்:**
- **மின்னஞ்சல்:**
- **நீங்கள் உங்களை சுய அடையாளப்படுத்துவது எவ்வாறு? உங்களின் இனப் பின்புலம் என்ன?**
  - இலங்கைத் தமிழர்
  - சிங்களவர்

- ○ இலங்கை முஸ்லிம்
- ○ இந்தியத் தமிழர்
- ○ பறங்கியர்
- ○ வேறு

- ***விருப்பத்திற்குரியது* : நீங்கள் எந்த மதத்தை அடையாளப்படுத்துகின்றீர்கள், ஏதாவது இருப்பின்?**
  - ○ பௌத்த மதம்
  - ○ இந்து மதம்
  - ○ இஸ்லாம்
  - ○ ரோமன் கத்தோலிக்கம்
  - ○ பிற கிருஸ்தவம்
  - ○ வேறு
- **உங்களின் பதவி நிலை மற்றும் தற்போதைய வேலை வழங்குனர்:**
- **நீங்கள் சார்ந்துள்ள நாடு மற்றும் நகரம்:**
- **சுயசரிதை:**
  - ○ *தயவு செய்து உங்களின் சுயசரிதையில் பின்வருவனவற்றை உள்ளடக்கி 300 சொற்களிற்கு மேற்படாதவாறு சமர்ப்பிக்க:*
    - ▪ நீங்கள் கவனம் செலுத்தும் பிரச்சனைப் பகுதி (மற்றும் எந்த மட்டத்தில் (உள்நாட்டு, தேசிய அல்லது சர்வதேச)
    - ▪ இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்கான காரணத்தை விளக்குக. இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கேற்பது என்பது உங்களின் தொழில் துறையில் ஏன் ஒரு சிறந்த நேரம்? உங்களின் தொழில்வாண்மைத் தொழிற் துறையில் இது உங்களுக்கு எவ்வாறு பயன்படும்?
    - ▪ அவசர நிலைமைகளுக்கு விரோதமான சூழல்களில் பணிபுரிவதற்கான முதலுதவி பயிற்சிகளை நீங்கள் பெற்றுக்கொண்டுள்ளீர்களா? ஆம் எனில், பெற்றுக்கொள்ளப்பட்ட பயிற்சிகளின் திகதிகள் மற்றும் சுருக்கத்தை தயவு செய்து உள்ளடக்குக.
    - ▪ உங்களின் தொழில் துறையில் நீங்கள் முகங்கொடுக்க நேரிட்ட சில பாதுகாப்புப் பிரச்சனைகள் எவை?
    - ▪ விருதுகள், பட்டங்கள், பிற தொழில்வாண்மைத் தகுதிகள்

## தொழில்வாண்மை அனுபவங்கள்:

- **தயவு செய்து உங்களது சுயவிபரக் கோவையை (CV) இணைக்க**
- **நீங்கள் ஊடகத்தின் ஒரு உறுப்பினராக இருந்தால், ஆதாரக் கடிதம்:**
  - ○ ஊடகவியலாளர், ஒரு பத்திரிகை ஆசிரியர் அல்லது குறிப்பு அத்தாட்சி ஒருவரிடமிருந்து ஆதாரக் கடிதம் ஒன்றைப் பதிவேற்றுமாறு உங்களுக்கு நாம் வலுவாகப் பரிந்துரைக்கின்றோம்.
- **நீங்கள் ஊடகத்தின் ஒரு உறுப்பினராக இருந்தால், கடந்த இரண்டு வருடங்களிலிருந்து உங்களின் ஊடகவியல் பணியின் இரு மாதிரிகளைத் தயவு செய்து இணைக்க.**
  - ○ மாதிரி 1
  - ○ மாதிரி 2

- **தொழில்வாண்மைக் குறிப்பு அத்தாட்சி:**
  - ○ குறிப்பு அத்தாட்சி 1:
    - ▪ முழுப்பெயர்:
    - ▪ பதவிநிலை மற்றும் நிறுவனம்/கம்பனி:
    - ▪ உறவுமுறை:

        - மின்னஞ்சல்:
        - தொலைபேசி:

    - குறிப்பு அத்தாட்சி 2:
        - முழுப்பெயர்:
        - நிலை மற்றும் கம்பனி:
        - உறவுமுறை:
        - மின்னஞ்சல்:
        - தொலைபேசி:
- **இந்த வாய்ப்பினைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டது எவ்வாறு?**
    - ட்விட்டர்
    - முகப்புத்தகம்
    - மின்னஞ்சல்
    - IWMF இன் செய்திமடல்
    - வேறு: தயவு செய்து விபரிக்கவும்
    - சுய தேடல் மூலம்

ஆம்! நான் NDI மற்றும் IWMF ஆகிய நிறுவனங்களிலிருந்து புதிய வாய்ப்புக்கள் , நிகழ்வுகள் மற்றும் எமது சமுதாயம் பற்றிய செய்திகள் பற்றிய தொடர்பாடல்களைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றேன்.

இந்த சமர்ப்பணம் எனது சொந்தப் படைப்பாகும் என எனது அறிவிற்கும் மற்றும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில், இது ஏற்கனவே பிரசுரிக்கப்பட்ட அல்லது வேறொருவரால் எழுதப்பட்ட எந்தவொரு உள்ளடக்கத்தையும் கொண்டிருக்கவில்லை என்பதையும் நான் இங்கு உறுதியளிக்கின்றேன்.

**கையொப்பம்:**